**சக்தி பௌண்டேஷன் - தமிழ் CCC வகுப்பு**
**யார் தப்பு செய்தாலும்...[ஓணம் புராணத்துடன் இதை இணைத்து சிந்திக்கச் செய்திடுக]**

---

தவறு என்பது தெரியாமல் செய்வது. அது மன்னிக்கப் படலாம். தப்பு என்பது தெரிந்தே வஞ்சத்துடன் திட்டம் இட்டுச் செய்வது. அதை யார் செய்தாலும் கவலை இல்லை, அதற்குரிய விளைவை அனுபவிக்கவே வேண்டும்.

இதோ இங்கு யார் யார் என்ன செய்து எப்படித் திண்டாடுகிறார்கள் பாருங்கள்!

**தலை கீழாய் தவம் செய்யும் ஆசிரியர்...**
**மஹாபலி**யிடம் **பெருமாள்** மூன்று அடி மண் கேட்டு, அவரை வஞ்சித்து, ஆணவம் நீங்கச் செய்து, "நிம்மதியாக பாதாள உலகில் போய் ஓய்வு எடு" என்று கூறிவிட்டு அவரும் வாமன அவதாரம் முடிந்து ஓய்வு எடுக்கத் தன் பாம்பு அணையைத் தேடிச் சென்று விட்டார்.

அவர் **வாமன**னாய் வந்து வஞ்சித்த காரியத்தை இரண்டு பேரால் ஒப்புக் கொள்ளவே முதியவில்லை. யார் அவர்கள்? மஹாபலியின் சேனாதிபதிகளான **மாலி - சுமாலி**.

அரக்கர் கூட்டத்துடன் அவர்கள் இருவரும் தம் குலகுருவான **சுக்ராச்சாரியரிடம்** சென்று அழுதனர், முறையிட்டு, ஏதாவது முறையில் பழிவாங்க வேண்டும் என்றனர்.

உண்மையை உணர்ந்த அவரும் தலை கீழாக மரத்தில் தொங்கிக் கொண்டே சிவனை த்யானித்து மஹா ஹோமம் ஒன்றைச் செய்தார். ஹோமத்தில் வரும் புகையை உணவாக உடலுக்குள் இழுத்துக் கொண்டு பல நாட்கள் ஹோமத்தைத் தொடர்ந்தார். இந்த விஷயம் மஹாபலியின் தாத்தாவான பக்த **ப்ரஹலாதனு**க்குக் காதில் விழுந்தது. தர்மவான்-பக்திமான் அவர் சும்மா விடுவாரா? என்ன?

**இந்திர லோகம் சென்ற பக்த ப்ரஹலாதன்...**
எவ்விதப் ப்ரச்சனைக்கும் அஹிம்சை முறையிலே தீர்வு காண வேண்டும் என்ற ப்ரஹலாதன், தேவலோகம் சென்றான். இந்திரனும் மிக்க மரியாதையுடன் வரவேற்றுப் பேசினான்.

”இந்திரா! அரக்கர் கூட்டம் எல்லாம் தம் ஆச்சாரியரின் கீழ் சில காலம் தவம்-த்யானம்-ஆன்மீகம் என வாழ முடிவு செய்து விட்டனர். மேலும் அவர்களைச் சீண்ட வேண்டாமே!” என்று ப்ரஹலாதன் கேட்டுக் கொண்டார்.

அன்று முதல் இந்திரனும் தேவர்களும் தலை கால் புரியாமல் ஆடினர்.சொல்லி மாளாத கூத்து தான்!

**ஒற்றன் செய்த கலகம்...**

சில காலம் சென்றிட, தேவ லோகத்து ஒற்றன் ஒருவன் இந்திரனிடம், ”தேவராஜ! அடியேன் பார்த்து வந்தேன், அரக்கர் கூட்ட குரு சிவனிடம் நம்மை அழிக்கும் வரம் வாங்கத் தலைகீழாய் ஹோமம்-தவம் செய்கிறார்! எச்சரிக்கை!” என்றான்.

**தொடர்ந்த வினை...**

உடனே இந்திரன் தன் படையுடன் அரக்கரை மீண்டும் மீண்டும் வம்புக்கு இழுக்க, அவர்கள் உடனே தன் குருவின் தாயைச் சரண் அடைந்தனர், காப்பாற்றும்படி வேண்டினர். அந்த அம்மையார் மிகப்பெரிய சிவ பக்தை, சக்தி கொண்டவள். அவளும் அவர்களுக்கு அடைக்கலம் தந்து, தேவர்களுக்கு முதலில் பல அறிவுரைகள் சொல்லிப் பார்த்தாள். தேவர்கள் கேட்பதாகவே இல்லை!

உடனே அம்மையார் அஹிம்சா முறையில் ஸ்ரீநித்ரா தேவியின் மூல மந்த்ரத்தை ஜெபித்து தேவர்களை ஆழ்ந்த தூக்கத்தில் ஆழ்த்தி விட்டாள்.

**விஷ்ணு செய்த வினை...**

பெருமாள் வைகுண்டத்தில் இருந்து பாதாள உலகம் வந்து தேவர்களை எழுப்ப முயற்சிக்கும் போது,

”ஸ்வாமி! என்ன தான் தேவர்கள் நல்லவர்கள் ஆனாலும், தற்போது தேவை இல்லாமல் அரக்கர் கூட்டத்தை இம்சிப்பதை நீங்கள் அல்லவா தடுத்து இருக்க வேண்டும்? இதோ நீங்களும் பாரபட்சம் பார்த்து விட்டீரே! நீங்களும் தூங்குங்கள்!” என்று மந்த்ர ஜெபம் செய்து பெருமாளையும் அம்மையார் தூங்கச் செய்து விட்டார்.

**இந்திரனின் வஞ்சகம்...**

சில காலத்தில் தூக்கம் கலைந்த இந்திரன், ”ஐயோ! பெருமாள் தூங்குகிறாரே!” என்று கவலைப்பட்டு அவரை ஸ்துதிகள் செய்து தட்டி எழுப்பி சுதர்சனச் சக்கரத்தையும் அரக்கரை நோக்கித் தூக்கக் கலக்கத்தில் ப்ரயோகிக்க வைத்து

விட்டான். அரக்கர்கள் பலர் இறந்தனர். குறிப்பாக சுக்ராச்சாரியாரின் அன்னையின் தலை வெட்டப்பட்டது.

அதன் பின் ஏற்படும் பயங்கர விளைவுகளை எண்ணி எண்ணி இந்திரன் உள்ளிட்ட தேவர்கள் பயந்து நடுங்கினர். **ப்ருகு மஹரிஷியின்** மகன் அல்லவா சுக்ராச்சாரியார். அவர் சும்மா விடுவாரா? இல்லை ப்ருகு தான் சும்மா விடுவாரா? அன்றே பெருமாளின் திருமார்பை எட்டி உதைத்தவர் அல்லவா?

**வினையின் தீர்ப்பு...**

ப்ருகு நடந்தவற்றைக் கண்டு ஆத்திரம் தலைக்கு ஏற, ”ஹே! பெருமாளே! அதர்மத்துக்குத் துணை போன உன் மனைவியை இதே அரக்கர் குல மன்னன் ஒருவன் அபகரிப்பான். அவளைத் தேடி நீ நாயாகப் பேயாக உலகில் திரிவாய்! என் மனைவியைப் பிரிந்த துக்கத்தை நீயும் உணர வேண்டும்! அதே போல் ஒரு தாயை இழந்த மகன் படும் துன்பத்தை நீயும் ஒரு தாயின் வயிற்றில் பிறந்து மகனாக உலகில் தாயின் பெருமைகளை உணர வேண்டும்!” என்று மஹாசாபம் தந்தார்.

எனவே தப்பு செய்தவன், அதர்மம் செய்தவன் தீவினை செய்தவன் யார் ஆனாலும் நீதி ஒன்று தான்!